# நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டம்

## கருத்திட்ட முகாமைத்துவ அலகு (PMU)
## வெற்றிடங்கள்

**01. <u>கருத்திட்டம் பற்றிய விபரம் :</u>**

கொழும்பு துறைமுக நகரம் என்பது இலங்கையின் மத்திய வர்த்தக மாவட்டமான கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மனங்கவர் வணிக நகரமான கொழும்பு நகரை விஸ்தரித்து அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய நகரமொன்றாகும். கடலில் நிரப்பப்பட்டு மீட்கப்பட்டுள்ள 269 ஹெக்டயார் நிலப்பரப்பில் பரந்துள்ள கொழும்பு துறைமுக நகரம் தெற்காசியாவின் முன்னோடி வதிவிட, வர்த்தக மற்றும் வியாபார பயண முடிவாக மாறும் என்பதுடன், இது இந்து சமுத்திரத்திர பிராந்தியத்தில் அமைந்துள்ள சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட நகரமாகவும் அமையும். இந்த துறைமுக நகரம் சம்பந்தமாக இலங்கை அரசுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை ஒருங்கிணைப்புச் செய்தல், முகாமைத்துவம், அவதானிப்புச் செய்தல் மற்றும் கண்காணிப்புச் செய்வதற்காக அமைச்சினால் கருத்திட்ட முகாமைத்துவ அலகு தாபிக்கப்பட்டுள்ளது.

**02. <u>வெற்றிடமான பதவிகள்:</u>**

| தொடர் இல. | பதவி | சுற்றறிக்கை இலக்கம் 01/2019 இற்கமைய சம்பள வகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | சிவில் பொறியியலாளர் (கட்டமைப்புசார்) | வகுதி - ஈ<br>பொறியியலாளர் (I)<br>பொறியியலாளர் (II)<br>பொறியியலாளர் (III) | 01 |
| 02. | சிவில் பொறியியலாளர் (உட்கட்டமைப்பு வசதிகள் | | 01 |

03. 2026.03.28 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2026 இற்கமைய மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பதாரிகள் குறைந்தபட்சம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஒன்றையேனும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| தொடர் இல. | பதவி | சம்பள வகுதி | தகைமைகள் |
|---|---|---|---|
| **01** | சிவில் பொறியியலாளர் (கட்டமைப்புசார்)<br><br>மற்றும்<br><br>சிவில் பொறியியலாளர் (உட்கட்டமைப்பு வசதிகள்) | வகுதி - ஈ பொறியியலாளர் (I) | (கீழே 1 அல்லது 2)<br>1. குறித்த துறையில் முதல் பட்டம் / குறித்த துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை<br>**மற்றும்**<br>குறித்த துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்வாண்மை நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட இணை உறுப்புரிமை / அதற்குச் சமமான தொழில்சார் தகைமை<br>**அத்துடன்**<br>குறித்த துறையில் குறைந்தபட்சம் 07 வருட கால அனுபவம்<br><br>2. குறித்த துறையில் அரசாங்க நாடளாவிய செவையின் வகுப்பு II/III ஐச் சேர்ந்த பதவியில் அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான அலுவலர் ஒருவர் அல்லது அதற்குச் சமமான தகைமை<br>**அத்துடன்**<br>3. குறித்த துறையில் வகுப்பு II/III ஐச் சேர்ந்த தவி ஒன்றில் குறைந்தபட்சம் 07 வருட கால அனுபவம் அல்லது அதற்குச் சமமான தகைமை |
| | | வகுதி - ஈ பொறியியலாளர் (II) | (கீழே 1 அல்லது 2)<br>1. குறித்த துறையில் முதல் பட்டம் / குறித்த துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை<br>**மற்றும்**<br>குறித்த துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்வாண்மை நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட இணை உறுப்புரிமை / அதற்குச் சமமான தொழில்சார் தகைமை<br>**அத்துடன்**<br>குறித்த துறையில் குறைந்தபட்சம் 04 வருட கால அனுபவம் |

| | | | |
|---|---|---|---|
| | | | 4. குறித்த துறையில் அரசாங்க நாடளாவிய சேவையின் வகுப்பு II/III ஐச் சேர்ந்த பதவியில் அல்லது அதற்கு மேற்பட்ட மட்டத்திலான அலுவலர் ஒருவர் அல்லது அதற்குச் சமமான தகைமை<br>**மற்றும்**<br>குறித்த துறையில் வகுப்பு II/III ஐச் சேர்ந்த பதவி ஒன்றில் குறைந்தபட்சம் 05 வருட கால அனுபவம் அல்லது அதற்குச் சமமான தகைமை |
| | | வகுதி - ஈ<br>பொறியியலாளர்<br>(III) | (கீழே 1)<br>1. குறித்த துறையில் முதல் பட்டம் / குறித்த துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை<br>**மற்றும்**<br>குறித்த துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்வாண்மை நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட இணை உறுப்புரிமை / அதற்குச் சமமான தொழில்சார் தகைமை |

## 04. **பொதுவான நிபந்தனைகள் : -**

விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

## 05. **சம்பளம் : -**

2026.03.28 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2026 மற்றும் ஏற்புடைய ஏனைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளுக்கு அமைய சம்பளம் செலுத்தப்படும் என்பதுடன், மேற்படி ஏற்புடையதான சுற்றறிக்கைகளுக்கு அமைய கொடுப்பனவுகளும், பயன்களும் உரித்தாகும்.

## 06. **விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான நிபந்தனைகள்: -**

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் : 02/2026 இன் 2:3:3 பந்தியில் (ஆ) இற்கமைய விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அரசாங்க சேவையில் இல்லாத விண்ணப்பதாரிகள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். அரசாங்க சேவையைச் சேர்ந்த

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை தமது நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**07. விண்ணப்பித்தல் : -**

அரச / அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை அவ்வவ் நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், நேரடியாக அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்களை தகைமைகள், அனுபவம் மற்றும் ஏனைய தகவல்களை உள்ளடக்கியதாக 2026……. **ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கீழே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரி மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**மின்னஞ்சல் முகவரி: psportcity@gmail.com**